பதிவு எண்: M. 6311 ★ தோல்பேசி :: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்.எல்

மலர்: 15] சென்னை: தை 18 (1—2—68) வியாழன் [இதழ்: 191 வெளியூர்: தை 19 (2—2—68) வெள்ளி

மொழிப் பிரச்சினையை ஆராயக் குழு

நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்க அனைத்திந்திய அடிப்படையில் குழு ஒன்று டெல்லியில் அமைக்கப்படவிருக்கிறது.

இக்குழு, மொழிப் பிரச்சினையை அண்மையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் விவாதிக்கும் என்று தெரிகிறது.

இந்தக் கூட்டத்திற்கு தி.மு.க. பிரதிநிதிகளும் அழைக்கப்படுவார்கள்.

இந்த நிலை நீடித்தால் இந்தியா நிலைக்குமா?

இந்திக்காரர்களுக்கு அஞ்சியே மொழித் தீர்மானம் கொண்டுவந்தனர்!

தடை நீளுகிறது மைசூரில்!

மைசூர், சன. 31—

இன்று முடிவடையவேண்டிய இருக்கும் தடையுத்தரவு பிப்ரவரி 4-ந்தேதி வரை நீடித்து ஸைஸர் மாவட்ட மாஜிஸ்திரேட் ஆணை பிறப்பித்திருக்கிறார்.

இந்த தடையுத்தரவு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை முன்னிட்டு விதிக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

சட்ட--அமைதிக்குலைவு

மத்திய அரசின் கவலை!

புதுடில்லி, சன. 31—

சில மாநிலங்களில் சட்டமும் ஒழுங்கும் குலைக்கப்பட்டு வருவது பற்றி மத்திய அமைச்சரவை மிக்க கவலையோடு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் படுத்தப்படுவதையும், சட்டத்தை யும் ஒழுங்கையும் கிலோகாட்டமுடியாத மாநில அரசாங்கங்களில் மத்திய அரசு தலையிட்டு தன்னுடைய நடவடிக்கையைச் செய்யும் என்று மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

"மொழித் தகராறு நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைத்துவருகிறது; 'எங்களுடைய கோரிக்கை ஏற்கப்படாவிட்டால், தமிழ்நாடு தனியாகப் பிரியவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை' என்று தமிழக மாணவர்கள் நிர் மா ன ம் நிறைவேற்றி புள்ளனர்.

"நாட்டின் சுதந்தரப் போரின் முன்னணியில் மாணவர்கள் இருந்தனர்; ஆனால் 20 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் மட்டுமன்றி அரசாங்க ஊ ழ ல ம், உத்தரப் பிரதேசம், பிகார், பஞ்சாப் ஆ டி ய மாநிலங்களிலும் இத்தகைய மனப்போக்கு இருப்பதைக் காண்கிறோம்!

"அவைகளே 'இந்தியா வேண்டாம்' என்றால், 'இந்தியா' என்பது எங்கே இருக்குமோ தெரியவில்லை!

"இதயற்றியேல்லாம் பேசுவதாகு எனக்கு உரிமை இருக்கிறது எனக் கருதுகிறேன்; இந்தியாவின் விதாலேக்குப் பாடுபட்ட தலைமுறையைச் சேர்ந்தவன் நான்; ஆனால், இந்திக்காரர்களின் பயமுறுத்தலுக்குப் பணிந்து, ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவுடன் கொண்டுவந்த தீர்மானத்தை நான் கண்டித்தற்காக, இந்திக்காரர்கள் எனக்கு எதிராக மிகவும் 'கொடிய கோவங்'கள் எழுப்பினர்! இப்பிப் பத்திரிகைகளும் என்னைத் தாக்கின—'ஜேப் பிரகாஷ் ஒழிக'—'ஜேப் பிரகாஷே! இந்தியாவைவிட்டு வெளியேறு' என்றெல்லாம் கண்டித்தன!

"நான் எளியவன் என்றாலும், மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு என்னாலான உதவியைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்; உண்மையில் நான் இன்று தமிழகத்திற்கு வந்ததும், முதல் பணியாகத் தமிழக முதலமைச்சர் அவர் கூறுவதைக் கேட்பதுதான்.

"தமிழ்நாட்டில் மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற வகையிலும் கொள்கை கொண்டவர்களாக இருப்பதால், 'தலைமையமைச்சரைச் சந்தித்து மொழிப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும்' என்ற முடிவை மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தமிழக மாணவர்கள் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு, தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

இந்திராவுடன் மாணவர் சந்திப்பு இல்லை

சென்னை, சன. 31—

சென்னை வழியாக அந்தமான் செல்லவிருக்கும் இந்தியத் தலைமையமைச்சரைச் சந்தித்து ஆட்சி மொழி விவகாரம் குறித்து விவாதிக்கவேண்டும் என்று செயற்குழு முடிவின்படி தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு தற்போது மாற்றிக்கொண்டிருக்கிறது.

மத்திய அமைச்சர்களும், காங்கிரசு செயற்குழு உறுப்பினர்களும் இந்தி பேசுகின்ற மக்களுக்குச் சாதகமாகவும், இந்தி பேசாத மாநில மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற வகையிலும் கொள்கை கொண்டவர்களாக இருப்பதால், 'தலைமையமைச்சரைச் சந்தித்து மொழிப் பிரச்சினை விவாதிக்க வேண்டும்' என்ற முடிவின் மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தமிழக மாணவர்கள் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு, தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

காந்தியைக் கடவுளாக்கி விட்டோம்!

அவர் காட்டிய பாதையைப் புறக்கணித்தோம்!

நூற்றுண்டு விழாவிலாவது புதிய ஒளி கிட்டுமா?

காந்தி நினைவு நாள் விழாவில் ஜெயப்பிரகாசர் வேதனை — அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சி. சுப்பிரமணியம் பேச்சு

சென்னை, சன. 31—

இன்று மயிலாப்பூர் ஜிரகிருஷ்ணா சபா மண்டபத்தில் நடந்த காந்தி நினைவு நாள் கூட்டத்தில் சர்வோதயத் தலைவர் செயப்பிரகாச நாராயணன் கலந்துகொண்டு பேசுகையில், 'காந்தியாரைக் கடவுளாக்கிக் கற்பூர ஆராதனை செய்து முனைத்துவிட்டோம்; ஆனால் அவர் காட்டிய வழியை மறந்துவிட்டோம்' என்றமுறிப் பிட்டார்.

இந்த விழாவுக்கு மாலில ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை வகித்தார்; கலவியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழ் நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம.பொ. சிவஞானம், சுதந்தரக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன், மேயர் டாக்டர் அப்புஸ்லா பேக் ஆகியோரும் பேசினார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் நெடுஞ்செழியன் பேசியதாவது:—

"விரவிட்டு எண்ணக்கூடிய உலக உத்தமர்களில் காந்தியார் ஒருவராக இருந்தார்! தம் சிந்தனையால் — சொல்லால்—செயலால்—அழுத மக்களே சிரிக்கச் செய்ய அவர் பாடுபட்டார்! அந்தக்காகப் பல இன்னல்களையும், இழப்புக்களையும் அவர் ஏற்றார்!

அந்திய ஆட்சியிலிருந்து விடுபட 'வன்முறை ஒன்றே வழி' என்றோர் உண்டு; 'இல்லை; வெள்ளையனுக்கு அடிபணிந்தே காரியங் களைச் சாதித்துக்கொள்ளலாம்' என்று சொன்னவர்களும் இருந்தார்கள்; இந்த இரண்டுக்கும் எதிராகப் புதியதோர் அறப் போர் முறையை வகுத்துக் கொடுத்த பெருமை காந்தியாரையே சாரும்!

"1968 அக்டோபர் முதல் 1969 அக்டோபர் திங்கள்வரை காந்தி நூற்றுண்டு விழா ஆண்டாகக் கொண்டாடுவதென்று தீர்மானித்துள்ளோம்; 'தமிழ்நாட்டில் சிறப்பார் பேரர் அன்றதிலும் காந்தியார் நினைவை நிலைநாட்டும் வகையில், மக்களுக்குப் பயன்படுகிற ஏதாவதொரு நிலையத்தை இந்த விழாக் காலத்தில் ஏற்படுத்துவதெனறும் தீர்மானித்திருக்கிறோம்; பள்ளி இல்லாத ஊரில் பள்ளியும், மருத்துவ மனை இல்லாத ஊரில் மருத்துவ மனையும், மனமகிழ் மன்றமில்லா இடத்தில் மனமகிழ் மன்றமும் திறக்கலாம்; காந்தியார் புகழை இவ்வகையிலெலாம் நில நாட்ட நம்மை நாமே ஆயத்தப் படுத்திக்கொள்ள இந்த விழா நமக்கு ஆக்கமும் எழுச்சியும் அளிக்கும்."

சி. சுப்பிரமணியம்

தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் பேசியதாவது:—

"இன்று நாட்டிலே சிக்கல்கள் அதிகம் உருவாகியுள்ளன; அரசியலில் — பொருளாதாரத்தில் —இவை அனைத்தும் அடங்கிய சமுதாயத்தில் சிக்கல்கள் உள்ளன; இவற்றில் ஏதேனும் ஒரு சிக்கலே எடுத்துக்கொண்டு அதற்குக் காந்தீய வழியில் தீர்வு கண்டாக வேண்டும். அப்படி நம் மால் காந்திய வழியில் நம சிக்கல்களுக்குத் தீர்வு காண முடிய வில்லையென்றால், இந்த நூற்றாண்டு விழாவோடு காந்தியை மறந்துவிடுவது நல்லது!

"ஜேயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்களே நான் கேட்டுக் கொள்கிறேன—காந்திய வழியில் மொழிச் சிக்கலுக்கு ஒரு தீர்வு காணமுதற்கு முயற்சியுங்கள்; அப்படிக் கூறமடியும் தீர்வு, 'நமக்கு அந்தி' என்று எந்த ஒரு பகுதியினரும் கூற முடியாதபடி அனைவரும் ஏற்கத் தக்கதாக அமையட்டும்!"

ஜெயப்பிரகாசர்

சர்வோதயத் தலைவர் ஜெயப் பிரகாஷ் நாராயணன் பேசியதாவது:—

"இந்திய மக்கள் சிலவற்றில், உலகத்திலேயே பெரிய வேதனைகளில் என்று வருத்தத்துடன் கூறுகிறேன்—என்பதும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன.

தலைவர்களின் தெய்வங்களாக்கி கற்பூர ஆராதனைகள் எடுத்து விடுவோம்; அப்படித்தான் காந்திக்கும் செய்துவருகிறோம்; ஆனால் அந்த வழிபாடுகளெல்லாம், வெறும் வழிபாடுகளே ஆகும். இருபதாண்டுகளாகி விட்டன—எத்தகைய கடமுறையில் கொண்டுவராமென செய்தோம்!

காந்தியார் படிப்பினைகள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்துக்கும் பொருத்தக்கூடியதாகும்.

காந்தியாரைக் கடவுளாக்கிய நாம், அவர் காட்டிய பாதையைப் புறக்கணித்தோம்!

ஏறத்தாழ பத்தாயிரம் ஆண்டு வரலாற்றைப் படைத்த ஒரு நாட்டுக்கு 20 ஆண்டுகள் என்பது பொரிபதலல!

இப்போது நடக்க இருக்கும் காந்தியார் நூற்றாண்டு விழா வாவது, நமக்குப் புதிய ஒளி தரட்டும்!'

வேதனிகளுக்கு அண்ணு மறுப்பு

இந்திரா நிகழ்ச்சிநிரலில் மாறுதல் இல்லை

சென்னை, சன. 31—

திருவனந்தபுரத்திலிருந்து அந்தமானுக்குச் செல்லும் வழியில் சென்னைக்கு வரவேண்டாம் என்று தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குத் தாம் போசனை கூறியதாக வெளி வந்துள்ள செய்தியை முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் மறுத்தார்கள்.

செய்தியாளர் கேள்விக்கு அண்ணு பதிலளித்து மேலும் கூறியதாவது:—

"சென்னைக்கு வரவேண்டாம் என்று தலைமையமைச்சருக்கு யோசனை கூறும் பிரச்சினையே எழவில்லை; பிப்ரவரி 5-ந் தேதி யோசனையும் நான் கூறவில்லை. அவருடைய பிறந்தநாள் விழாவிலாவது தான் நான் விசாரித்தேன். இறுதியாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் தமிழக அரசுக்குக் கிடைத்துள்ளது. ஏற்கனவே திட்டமிட்டபடி சென்னை வழியாகவே தலைமையமைச்சர் பயணமாகிறார்.

புதுவையிலும் பள்ளிகள் மூடப்படும்

புதுவை, பிப். 1—

புதுவை மாலிலத்திலுள்ள எல்லாக் கல்விக்கூடங்களும் இன்று முதல் காலவரையறைத் மூடப்படும்.

மாணவர்கள் தொடர்ந்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாலேயே கல்விக்கூடங்கள் மூடிவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

வரலாறு உணர்த்தாத நிலை உருவாகியுள்ளது!

தாய்மொழியின் உரிமையைக் காக்க முயலுவது தவறானதல்லவே!

இலக்கண -- இலக்கிய வரம்பற்ற மொழிக்கா ஆட்சி மொழியாகும் தகுதியை அளிப்பது?

'வளமிக்க மொழிகளைப் புறக்கணித்தால் எதிர்ப்பு வருவது இயற்கையே'- மொழிப் பிரச்சினை பற்றி அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கவுரை

"நம்முடைய தேசீய மொழிகள் பதினான்கும் இந்திய ஆட்சிமொழிகளாக வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்படுகிறவரையில், ஆங்கிலம் தொடர்ந்து இந்திய அரசில் ஆட்சி மொழியாக இருந்தாக வேண்டும்; நமது பொது மொழியாக - தொடர்பு மொழியாக இருந்தாக வேண்டும்.

"இன்றையத்தினம் இந்தியாவில் இருக்கின்ற எந்த மொழியாக இருந்தாலும் உலகத் தொடர்பைக் கொள்வதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்க வேண்டும்; உலக வணிகத் தொடர்பைக் கொள்வதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்க வேண்டும்; பல்வேறு துறைகளில் அறிவியல் கருத்துக்களைப் பெறுவதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்க வேண்டும்; பொறியியல், மரவியல், நிலவியல், விலங்கியல், மருத்துவ இயல் ஆகிய எல்லாத் துறைகளிலுமே ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்க வேண்டும்.

"ஆக, இந்திய மொழிகளில் எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும், 'கட்டாயம் ஆங்கிலம் படித்துத்தான் தீர வேண்டும்; ஆங்கிலத்தின் துணையைக் கொண்டே பல்வேறு துறைகளிலும் தங்கள் தங்கள் தாய்மொழியை வளர்த்துக்கொண்டாக வேண்டும்' என்கிற நிலைமை இருக்கின்ற காரணத்தினால்— சரியாகவோ, தப்பாகவோ இந்த நாட்டின் தொடர்பு மொழியாக இன்றையத்தினம் ஆங்கிலம்தான் இருந்துவருகிறது—அந்த ஆங்கிலமே இருந்தாக வேண்டும்.

"ஆங்கிலம், இங்கிலாந்து நாட்டில் தோன்றியதாக இருக்கலாம்; இங்கிலாந்தில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறினார்கள் என்பதால், இன்றைக்கு அமெரிக்காவில் ஆங்கிலம் பேசப்படுகிறது; கனடாவில் உள்ளவர்கள் பேசும் மொழி ஆங்கிலம்; ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறினார்கள் என்பதனால், ஆஸ்திரேலியாவில் உள்ளவர்கள் பேசும் மொழி ஆங்கிலம்; தென்னாப்பிரிக்காவில் உள்ளவர்கள் பேசும் மொழி ஆங்கிலம்; இந்தியாவிலும் சராசரியாக எல்லாக் குக்கிராமங்களில் உள்ள சிலருக்காவது தெரிந்திருக்கிற மொழி ஆங்கிலம்தான்!

"இந்தி மொழி பேசுன்றவர்கள் அதிகம் என்றாலும், ஒரு குறிப்பிட்ட இடங்களில்தான் கும்பலாக உள்ளவர்கள் பேசும் மொழியாக அது இருக்கிறது; ஆனால், கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்திய மொழி ஆங்கிலம்தான்! இந்த ஒற்றுமை காக்கப்பட வேண்டும் என்றால் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்தாக வேண்டும்!"

இவ்வாறு, கடந்த சனவரி 23-ம் நாள் கூடிய தமிழகச் சட்டமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் மொழிப் பிரச்சினை பற்றிய தீர்மானத்தை அவைமுன் வைத்து அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; மேலும் அவர் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு :—

உணர்ச்சி--உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள...!

"மொழிப் பிரச்சினை எந்த அளவுக்கு எல்லோருடைய உள்ளத்தையும் பற்றி நிற்கின்ற ஒரு உணர்ச்சிகரமான பிரச்சினை என்பதை நாடு இப்பொழுது உணர்ந்திருக்கிறது; காரணம், மற்ற எந்தப் பிரச்சினைகளுக்கும் மொழி நிலைக்களனாக அமைந்திருக்கிற காரணத்தால், ஒவ்வொருடைய உள்ளத்தையும் அது பற்றி நிற்கிறது. அது உணர்ச்சி வழியாக வெளிப்படுகின்ற தன்மையில்—ஒவ்வொருவரும் தங்களுடைய உணர்ச்சியையும் உரிமையையும் காப்பாற்றிக்கொள்கின்ற வகையில்—மொழிப் பிரச்சினையை அணுகிவருகிறார்கள்.

மொழிப் பிரச்சினையே இல்லாத நாடு எது?

இந்த நாட்டிலே மட்டுமல்லாமல், உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலேயுமகூட, மொழிக்குத் தங்களுடைய முழு உரிமையையும் உயிரையும் வைத்து, உணர்ச்சிகரமான முறையிலே தான் மொழிப் பிரச்சினையை அணுகிவருகிறார்கள். இந்தப் பிரச்சினை இல்லாத நாடே இல்லை என்று நாம் சொல்லலாம்.

பிரிட்டனிலேகூட, வெல்ஷ் — ஆங்கிலம்— ஸ்காட்ச் மொழிகளைக் குறித்த பிரச்சினை -- இவ்வளவு நாட்கள் ஆகியும் -- இன்னும் இருந்துகொண்டிருக்கிறது; அதைப் போன்றே, கனடா நாட்டிலும் இருந்துகொண்டிருக்கிறது; ஐரோப்பாக் கண்டத்தின் பல நாடுகளிலும் இருந்துகொண்டு வருகின்றது; பல்வேறு மொழிகளைக் கொண்ட இரஷ்யாவும்கூட, அதைத் தீர்ப்பதிலே ஈடுபட்டிருக்கிறது.

அவற்றையெல்லாம்விட அதிகமாக—தாய்மொழிகளை அதிகமாகக் கொண்டிருக்கின்ற இந்தியாவில், ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மொழிக்கு ஆக்கம் தேடிக்கொள்ளுவதற்கும்—தங்களுடைய மொழியின் உரிமை எந்த அளவுக்கும் பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தில் அதைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குமான முயற்சியில் ஈடுபடுவது இயற்கையாகும்.

சிக்கல் தீராது என்பதை நடைமுறையில் காண்கிறோம்

அந்த முறையிலேதான், இந்த மொழிப் பிரச்சினையை—உள்ளத்தைப் பற்றி நிற்கின்ற இந்தப் பிரச்சினையை, வெளியே இருக்கும் பல்வேறு பிரச்சினைகளோடு ஆராய்ந்து — தக்க முடிவு எடுத்து—அந்தப் பிரச்சினை பற்றிய குறைபாட்டை நீக்கி— நிறைவுபடச் செய்து— அதைச் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால், மொழி, உள்ளத்திலே இடம்பெற்று உணர்ச்சி வழியிலே அமைந்திருக்கின்ற காரணத்தால், உணர்ச்சிக்கும் உள்ளத்திற்கும் பாங்கிற்கும் மதிப்பு அளித்து நிறைவேற்றப்பட்டாலன்றி, இந்தச் சிக்கல் தீராது என்பதை நம்முடைய நாட்டினுடைய நடைமுறையிலே நாம் கண்டுகொண்டுவருகின்றோம்.

உணர்ச்சியை மதிக்கும் சூழ்நிலை ஏற்படாதது ஏன்?

இந்த மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பலரும், பல்வேறு சமயங்களில் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும், இன்னும் இந்தச் சிக்கல் தீர்க்கப்படாத வகையிலேதான் இருந்துகொண்டு வருகிற தன்மையை நாம் காண்கின்றோம். அதற்கு அடிப்படைக் காரணம்—அவரவர்களுடைய விருப்பத்தையும் மதித்து, அதற்கேற்றபடி எல்லோருக்கும் திருப்தி அளிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படாததுதான் என்பதை நாம் நன்றாக அறிந்துகொள்ளுகிறோம்.

இன்றும் ஆட்சிமொழிப் பிரச்சினையைப் பொறுத்து ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு நிலைமைகளையும் நாம் காண்கிறோம். பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், அந்த முடிவுகள், ஒத்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை.

கருத்துக்களை வலியுறுத்தினர்-- கண்ட பலன் என்ன?

இந்த நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு, நாட்டுக்கான பல்வேறு மொழிப் பிரச்சினையை ஆராயும்வகையில் — 'ஆட்சி மொழி எப்படி இருக்கவேண்டும்' என்பதைப்பற்றித் தீர்மானிக்கின்ற நிலைமையில்—அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்ற நிலைமையில்—பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; இந்தி பேசுகிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்; இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை வலியுறுத்திவந்திருக்கிறார்கள்.

ஆகவே, 'ஒருமித்த மனப்பான்மை' என்ற அடிப்படையில் இந்த ஆட்சி மொழிச் சட்டத்தை — இந்தி ஆட்சி மொழிப் பிரிவை—அரசியல் நிர்ணய சபை சட்டத்தில் சேர்த்திருப்பதாக வரலாறு நமக்கு அறிவுறுத்தவில்லை.

வரலாற்று விவரங்களைத் தெளிவாகவே கூறினர்!

அதுவும், அரசியல் நிர்ணய சபை சட்டத்தை உருவாக்குகின்ற பொறுப்பிலே இருந்த காங்கிரசுக் கட்சியும்கூட— பாராளுமன்றக் கூட்டத்தில்கூட —ஆட்சி மொழிப் பிரச்சினை வந்த நேரத்தில்கூட — இந்தி பேசுகின்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பக்கமும், இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒருபக்கமும் அமர்ந்து முடிவுகள் எடுக்கும்போதுகூட —அப்பொழுது கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய காலஞ்சென்ற பாபு இராசேந்திர பிரசாத் அவர்களுடைய வாக்கின் மூலமாக அது வெற்றி பெறுகின்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, 'கட்சிக் கட்டுப்பாட்டுடன் அத்தனை பேரும் ஆதரவளித்து, ஆட்சி மொழியாக ஆக்குகின்ற நிலைமை ஏற்பட்டது என்பதை வரலாற்று விவரங்களையெல்லாம் அறிந்தவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

எந்த நிலையில் இந்தி அந்தத் தகுதியைப் பெற்றது?

அதைப் பற்றி எடுத்துச்சொல்லுகிறபோது, 'சாதாரணமாக ஒரு கருத்து விவாதிக்கப்பட்டு இரண்டு பிரிவினர் பிரிந்து சம அளவாக இருப்பார்களேயானால், அந்தக் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகிறவர், தாம் அளிக்கின்ற வாக்கினை, ஏற்கனவே இருந்துவருகிற ஒரு நிலைக்குத்தான் அளிக்க வேண்டுமே தவிர, தன்னுடைய 'காஸ்ட்டிங் வோட்'டை புதிய மாறுபட்ட நிலைக்கு அளிப்பது மரபு அல்ல' என்ற முறை இருக்கிறது.

அந்த மரபு மாறிய வகையிலே வெற்றி பெற்று, அரசியல் சட்டத்திலே இடம் பெற்ற இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழியாகும் என்றும், அதுவும் தேவநாகரி வடிவத்தில் இருக்குமென்றும், பதினைந்து ஆண்டுகள் கழித்து அதுவே முழு முதல் ஆட்சிமொழியாக இருக்கும் என்ற நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, நாட்டிலே அது பற்றிய கருத்து வேறுபாடுகள் பலப்பல வகையிலே எடுத்து வைக்கப்பட்டு, அதை மாற்றுவதற்கு முயற்சிகளும் பல வகையிலே நடைபெற்றுக் கொண்டு வந்தன என்பதை நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளிலிருந்தும், பல்வேறு குறிப்புக்களிலிருந்தும், தீர்மானங்கள்—மாநாடுகள் ஆகியவற்றின் மூலமும் நாம் நன்றாக—தெளிவாக அறிந்துகொள்கின்றோம்.

பல்வேறு துறையினரும் நிலைமையை ஆராய்ந்தனர்!

'இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியாக மாறுமேயானால், அதன் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் என்ன என்னவாக இருக்கும்' என்று ஒவ்வொரு துறையினரும் தங்கள் தங்களுடைய நிலைமைகளிலிருந்து ஆராய்ந்து பார்த்தார்கள்.

மாணவர்கள் தங்களுடைய நிலைமையிலிருந்து ஆராய்ந்து பார்த்தார்கள்; பேராசிரியர்கள் தங்களுடைய நிலைமையிலிருந்து ஆராய்ந்தனர்; பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும், முதல்வர்களும் தங்கள் தங்களுடைய நிலைமைகளிலிருந்து ஆராய்ந்து பார்த்தனர்; உலக வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் வணிக வேந்தர்களும், வணிகப் பெருமக்களும் தங்கள் தங்கள் நிலையிலிருந்து ஆராய்ந்து பார்த்தனர்; அறிவியல் அறிஞர்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும் தங்கள் தங்களுடைய நிலைகளிலே இருந்து ஆராய்ந்து பார்த்தனர்; ஆங்காங்கு இருக்கின்ற பொதுமக்களும் தங்களுடைய கருத்தை எடுத்துச்சொன்னார்கள்.

அரசியலை நடத்திச் செல்ல— பாடத் திட்டங்களைப் போதிக்க —பயிற்சி மொழியாகக் கொண்டுவர — என்பவற்றின் மீதெல்லாம் முடிவு எடுக்கும் போது தங்கள் தங்களுடைய மாநில மொழிக்கு—வட்டார மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தங்கள் கருத்துக்களை எடுத்து முன் வைத்தார்கள்.

அச்சமும் பீதியும் அந்த நிலையில் உருவாகியது!

'இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கும்; பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதுவே முழுக்க முழுக்க ஆட்சி மொழியாக மாறும்' என்ற கருத்துக்கு இடம் ஏற்பட்டதால், இக்கருத்துக்கு மாறுபட்டவர்களும்— வேறுபட்டவர்களும் — முரண்பட்டவர்களும் பலவகையிலே அதற்கு எதிர்ப்புக் கருத்துக்களை உகுவாக்கி வளர்த்து வந்ததன் காரணமாகவும், இந்தி பேசாத மாநில மக்களிடத்திலே இந்நிலைமை பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாகவும், அதன்படி. 'இந்தி பேசாத மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக அரசியல் சட்டத்தினால் ஆக்கப்படுவார்கள்' என்ற எண்ணம் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டு, அதன் காரணமாக அச்சமும், பயமும், பீதியும் ஏற்பட்டன.

எந்தக் கட்டத்தில் அந்தக் கருத்தை வலியுறுத்தினார் நேரு?

அந்த நிலைமையிலேதான், முன்னாள் இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், இந்தி பேசாத மாநில மக்களுடைய சங்கடங்களையும் மற்ற நிலைமைகளையும் உணர்ந்தறிந்து — இந்தியாவின் ஒற்றுமையையும் மனதில் வைத்துக்கொண்டு, 'இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்ற காலம் வரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்; அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக எந்தக் கட்டத்திலும்—எந்த முறையிலும் இந்தி திணிக்கப்படமாட்டாது' என்று பல சமயங்களிலே விளக்கம் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பத்திரிகை நிருபர்களிடமும், நாடாளுமன்றக் கூட்டங்களிலும் சில பல சமயங்களில் அவர், தன்னுடைய இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்.

நேருவின் வாக்குறுதிக்குக் கிடைத்த மதிப்பு இது!

"'இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரையில் ஆங்கிலம் நீடிக்கும்' என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்; இதனால், இந்தி ஆட்சிமொழியாவதன் மூலமாக ஏற்படுகின்ற சங்கடங்களைத் தீர்க்க முடியும்; அந்தவகையில் நல்லதோர் சூழ்நிலை ஏற்படுத்த முடியும்; பண்டித ஜவகர்லால் நேருவினுடைய வாக்குறுதி சட்டமாக ஆக்கப்பட்டாலன்றி, அதை மக்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்; அந்த அடிப்படையிலேதான் அதற்குச் சட்ட வடிவம் தருதல் வேண்டும்; இல்லாவிட்டால்

(8-ம் பக்கம் பார்க்க)

மொழிச் சிக்கலில் உள்துறையமைச்சர் ஈடுபடுவதேன்?

"மொழிச் சிக்கல் இந்த நாட்டில் மட்டுமல்ல—கனடா போன்ற பிற நாடுகளிலும் இருக்கத்தான் செய்கிறது !

"ஆட்சிமொழிச் சிக்கல் மத்தியக் கல்வியமைச்சரால் கையாளப் படவில்லை என்றும் உள்துறையமைச்சரால் கையாளப்பட்ட தென்றும் அறிகிறேன்.

"உள்துறையமைச்சர் (சவான்), சட்டம் அமைதியைப் பேண வேண்டியவராவார்—மொழிச் சிக்கலில் ஈடுபடவேண்டிய வரல்லர் !

"இந்தச் சிக்கலில் கல்வியமைச்சரைக் காண முடியவில்லை ; மாறாக, உள்துறை அமைச்சர் திருத்தங்கள் கொண்டுவரு வதையும், விளக்கங்களுள் தருவதையும், ஒருபோதும் நிறைவேற் றப்படாத உறுதிமொழிகளைக் கொட்டுவதையும் நாம் காண் கிறோம் !

"காம் ஒவ்வொருவரும் நமது தாய்மொழியைப் பேண வேண் டும் ; ஒவ்வொருவரும் தம் தாய்மொழியைத் தாயைப்போல் மதிக்கவேண்டும்.

"தெலுங்கும் தமிழும் இந்தியைக் காட்டிலும் மூத்தவை ; ஆனல் இந்திக்கு வயது எத்தனை ? அம்மொழிகளாரல் தமக்குப் பெருமை தரும்வண்ணம் எங்கெந்த நூல்களை வைதிருக் கிறார்கள் ?

"இந்தி மேசம் மக்களுக்குப் பெருமை பாராட்டிக்கொள்ள இரண்டு நூல்கள்தான உண்டு ; ஒன்று—துளசிதாஸ இராமா யணம் ; மற்றது—அன்றந்திந்திய இரயில்வே வழிகாட்டி !

"கமது பண்பாடும இலக்கியமும் இலக்கணமும் பழமை யானவை !

'இந்தியை மூன்று மாதத்தில் கற்றுக்கொள்ளலாம்' என இந்தி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள் ; அதில் கற்றுக்கொள்ள ஏது மில்லாததே இதற்குக் காரணம் !"

---அறிஞர் அண்ணு

(நேஞலி கருத்தரங்கில்)

சென்னைச் சிறை இட மாற்றம்

'இப்போது இல்லை' என அதிகாரி தகவல்

சென்னை, 1-ச.ன. 30—"சென்னையில் உள்ள மத்திய சிறைச்சாலை செங்குன்றத் திற்கு மாற்றப்படமாட்டாது" என்று, சிறைத் துணைத் தலைமை அதிகாரி இன்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது :—

"சென்னைச் சிறைச்சாலையை செங்குன்றத்துக்கு மாற் றி விட்டு, இப்போது சிறைச்சாலை இருக்கும் கட்டிடத்தை தலைமை மருத்துவமனையின் தேவைக் கட்டி டமாகப் பயன்படுத்திக்கொள் வது என்ற போச்சை இருந்துவரு கிறது ; ஆனல், செங்குன்றத் தில் கட்டப்படவிருக்கும் கவீன சிறைச்சாலைக்காக ரூ. 1 கோடி வரை செலவு ஏற்படும் ; மாலில அரசின் அனுமதி இதற்கு இன் னும் கிட்டவில்லை ; ஏனெனில், இவ்வளவு பெரிய தொகையை இப்போழுதுள்ள நிலையில் மாலில அரசு அனுமதிப்பது என் பது எளிதான காரியமல்ல.

"ஆனலும், செங்குன்றத்தில் 100 ஏக்கர் நிலத்தை உரிமைப் படுத்தவதற்கான திட்டம் ஏற் றுக் கொள்ளப்பட்டு, அந்த வேலேயும் தொடர்ந்து நடை பெற்று வருகிறது."

கையை உணர்வு எங்கும் ஏற்பட் டிருக்கிறது !

நூருண்டுக் காலத்திற்குள் தோன்றிய ஜப்பான் மொழி, அறிவியல் துறையில் அனத் தறிவையும் எடுத்துத் கருகின்ற வகையில் தன்னத்தானே வலிவு படுத்திக் கொண்டதாக—தன் னத்தானே வளப்படுத்திக் கொண்டதாக—உலகத்துப் பிற மொழிகளில் உள்ள அறிவியல் துறை அறிதலையும் எடுத்துச் சொல்லும் வலிவை உடைய தாக வியக்கத்தக்க அளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறது !

அதைப் பார்க்கும்போது, நம் மொழிகள் அதையிட கற்ப தற்கு எளிமை ! இலக்கிய இலக் கண வரம்புடன் பல நூற் றுண்டுகளாக வளர்ந்து வந்தி ருக்கின்ற மொழிகள்—மேலும் பலவும் நல்ல வளர்ச்சி அடை யத்தக்க நன்மைகொண்டதான நம் மொழிகள்—ஆங்கில மொழி, மராட்டி மொழி ஆகிய எல்லா இந்திய மொழிகளுமே ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய தகு தியைப் பெற்றதுதான் என்கிற உணர்வு ஏற்பட்டிருக்கிறது !

இந்த நிலையில், ஒரு வட்டார மொழியை இந்தியாவின் பொது மொழியாகத் தினிக்கின்ற தன்மை எதிர்க்கப்படுகிறது !

இதற்கு முன்பாகவே, 'ஒரு வட் டார மொழிக்குத் தனி' மதிப்பு —தனிச் சலுகை அளிக்கப் படாமல், பதினுன்கு தேச்ய மொழிகளுக்கும் சம மதிப்பு—சமச் சலுகை அளிக்கப்பட வேண்டும்' என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது ; அந்தக் கருத்தைத்தான் இன் றையத்தினம் பலர் தங்கள் திருத்தங்களின் மூலம் தெரி வித்திருக்கிறார்கள்.

நம்முடைய தாய்மொழி தமிழ் தான் ; நம்முடைய வட்டார மொழியும் தமிழ்தான் ; ஆகவே நமது தமிழ் அரசின் நிர்வாக மொழியும் தமிழ்தான் ; அதில் எவ்விதச் சிக்கலும் இல்லே.

இந்திய அரசின் நிர்வாக மொழி யாக, நம்முடைய தேசிய மொழி களாக உள்ள பதினுன்கு மொழி களும் அமைந்தாக வேண்டும். இந்தப் பதினுன்கு மொழிகளுள், 'செரிமோனியல் பிரெசிடெண்ட் வேஷ்' ஆக—ஆட்சிமொழி யாக இடம் பெறுகிற வகையில் ஒன்றுபட்டாக வேண்டும் ; அது வரை ஆங்கிலம் ஒன்றுதான் நிர்வாக மொழி என்கிற நிலே இருந்தாக வேண்டும்."

விளம்பரம்

ரூ. 275 இலட்சத்திற்கான 6 சதவிகித தமிழ்நாடு மின்கழகக் கடன்--1980

[வட்டி தருவதற்கும் முதலீட் டிருப்பித் தருவ தற்கும் தமிழக அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ளது]

இந்தியப் பொறுப்புறுதிச் சட்டப்படி, கடன் ஈட்டுப் பத்திரங் கள், டிரஸ்டி பாதுகாப்புப் பத்திரங்களாக இருக்கும் ; மேலும், இன்குரன்சுச் சட்டம், பாங்கிங் கம்பெனிகள் சட்ட நோக்கங்களுக்காக அங்கிகரிக்கப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்க ளாகவும் இருக்கும்.

1934 இந்திய ரிசர்வ் பாங்கிச் சட்டம் 17-(4)-(a) பிரிவின்கீழ் இந்தப் பத்திரங்கள் முன்பண நோக்கங்களுக்காக அரசுப் பத்திரங்களுக்கு இணையாகக் கருதப்படும்.

வழங்கப்படும் வீதம்: ரூ. 98 சதவிகிதம்

1980 பிப்ரவரி 12-ஆம் நாள் அன்று அதே சம லிசித்தில் திரும்பப்பெறத்தக்கது.

1968 பிப்ரவரி 12-ஆம் நாள் முதல் பணமாகவோ 'கரோல்'வங்கியை தொகை பெறப்படும் ; ஆனல், மொத்தம் கமார் ரூ. 275 இலட்சம் வருமான நும், முன்னறிவிப்பின்றி வரும் நிறுத்தப்படுவீதம். எக்காரணத்தைத் கொண்டும் 1968 பிப்ரவரி 17-ஆம் நாள் அலுவலக நேர முடிவுக்குப் பின் நீங்க கப்பட மாட்டாது.

சென்னை, ஆமதாபாத், பம்பாய், கன்கத்தா, இதராபாத், காள்பூர், புது டில்லி ஆகிய இடங்களிலுள்ள கிரட் பேங்க் ஆப் இந்தியா உள்ளிட்ட நலிலை வங்கிகளிலும், தமிழ்நாட்டிள் உள்ள அதன் எல்லாக் கிளைகளிலும் கோவை, பொங்களூர்—பெங்களூர் பெடி ரிலைகளிலும் விண்ணப்பங்களே பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்சொன்ன எல்லா அலுவலகங்களிலும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தமிழக மின்வாரத்தின் எல்லா அலுவலகங்களிலும் விண்ணப்பப் படிவங்களும், நிபந்தனைகள் பற்றிய விவரங் கள் அடங்கிய நலல்களும் கிடைக்கும்.

இரா. நெடுஞ்செழியன் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதி புறக்கணிக்கப்பட்டு விடும் ; 'இந்தியப் பேரரசும் பல வேறு துறையினரும மறைமுக மாகவும், கேரமுகமாகவும் இந்தி யைத் தினிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவார்கள்' என்று பொது மக்கள் அச்சமும், பீதியும் கொண்டுள்ளதால், பண்டக ஜவகர்லால் நேருவினுடைய வாக்குறுதியைச் சட்ட வடிவத் தில் கொண்டுவர வேண்டும்" என்று பலரும் வலியுறுத்தினர் கள் ; 'அவவாக்குறுதி, சட்ட வடிவமாகக் கொண்டுவரப்பட வேண்டும்' என்ற கருத்து, பலகைகளிலே பலராலும் வற் புறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

பண்டித ஜவகர்லால் அவர்களு டைய வாக்குறுதியைச் சட்ட வடிவமாகக் கொண்டுவருகின்ற முறையில்—1967-ல் கொண்டு வரப்பட்ட கிலையில்—அதற் குப் பல தீருத்தங்கள் கொண்டு வரப்பட்டு—தீர்மானம் கொண்டு வந்து, ஏற்கனவே இருந்த நிலே மையையிட்டு இன்னும் அதிக மான பீதியை உண்டாக்கத் தக்க நிலேயில்—இந்தி பேசாத மாநில மக்களுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் நிலேமை ஏற்பட்டுள்ளது.

எந்த நிலையிலே சிக்கல் உருவாகியிருக்கிறது?

தாய் மொழியைப் பொறுத்த வரையில் பிரச்சினை இல்லே ; அது அனவருக்கும் ஒத்த முடி வாக அமைந்திருக்கிறது ; வட் டார மொழி தமிழகத்தான் இருக்கிறது. வளர்ந்தோங்கி வருகின்ற—தொழில் அறிவும், என்றென்றும் இருந்துவருகின்ற ஆற்றலும் அறிவும் பெற்றிருக் கின்ற—தமிழ், தமிழகத்தின் வட் டார மொழி எனபதில் பிரச்சினே இல்லே.

மாலில ஆட்சி மொழியைப் பொறுத்த வரையில், 'தமிழ் தான், தமிழகத்தின் ஆட்சி மொழி' என்ற பிரச்சினையும் எவ்வித மாறுபாடும் வேறு பாடும் யாருக்கும் ஏற்படவில்லே.

மத்திய அரசைப் பொறுத்த வரையில், 'இந்தினான இந்தியா வின் ஆட்சிமொழி' என்ற பிரச் சினே வரும்போதுதான் சிக்கல் களும், பல்வேறு கருத்துக்களும் ஏறபடுகின்றன—இந்தியாவினு டைய ஆட்சிமொழி எதவாக இருக்க வேண்டுமென்பதில் சிக் கல்கள் தோன்றுகின்றன !

எத்தன மொழிகள் இங்கு?--விட்டுத் தருவரா மக்கள் ?

இந்தியா, பல மொழிகள் பேசப் படுகின்ற ஒரு துணைக் கண்டம் ; இதில் 584 மொழிகள—'லங்குவேஜஸ் அண்டு டைலக்ட்' இருப்பதாகக் கணக்கிட்டிருக் கிறார்கள். அவற்றில் குறிப் பிடத்தகுந்தவை 179 மொழி களாகும் ; அதிலும், இலக் கணம்—இலக்கிய வளம் பெற்று, நல்ல கட்டுக்கோப்பு என்கின்ற பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்ற—மாகில அடிப் படையில் இயங்கப்படுவதாக இருக்கும மொழிகள் 14 உள் ளன ; இந்தப் பதினுன்கு மொழி களும் இந்தியாவில் முக்கியத்து வம வாய்ந்த தேசிய மொழி களாகக் கருதப்படுகின்றன ; அனதைத் தவிர, அட்டவணையில் சேர்க்கப்படாத மொழிகள் இன் னும் பல இருக்கின்றன ; 'அலவலனியும் தேசிய மொழி களாக அட்டவணையில் சேர்க்க வேண்டும்—ஏற்றுக்கொள்ள வேண்டும்—என்று அக்காந்த மாலில மக்கள் முயற்சி எடுத் துக்கொண்டு வருகிறார்கள் ! எல்லா மாலில மக்களும் தங்கள் தங்கள் மொழியை ஆட்சி மொழியாக வளர்க்கின்றமுறை யில் ஈடுபட்டிருக்கின்றார்கள் !

வளமிக்க மொழிக்கு ஆட்சித் தகுதி இருக்காதா ?

அதுமட்டுமல்ல ; உலகத்தில் இருக்கிற இதனலிப் பின்தங்கி யே மொழிகள்—இலக்கண இலக்கிய வரம்புகளர் குறைந்த மொழிகள்—ஒரு நூற்றாண்டுக் குள்ளே எழுந்த மொழிகள் ஆட்சிமொழியாகும் நிலையைப் பெறுவிற்றதைப் பார்க்கும் போது, மிக்க பழங்காலந் தொட்டே வளர்ந்து வந்திருக் கிற நம் மொழிகள்—இலக்கிய இலக்கண வரம்புகளர் செம்மை யாகப் பெற்றுள்ள நம் மொழி கள்—பரந்து விரிந்து பெ கின்ற நம் மொழிகள் ஆட்சி மொழியாக வாழமுடியும் என்ற தன்னம்பிக்கை எல்லாத் துறை களிலும் வளர்ந்து வருகிறது ! இத்தகைய தன்மை—இத்த

மொழி பெயர்ப்பு வசதி

சஞ்சீவியாருக்கு கழக உறுப்பினர் சம்பந்தம் கடிதம்

நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம், நாடாளுமன்றத் தலேவர் திரு. சஞ் சீவி ரெட்டிக்கு ஒரு கடிதம் எழுதி யுள்ளார்.

"நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப் படுகின்ற உரைகளே வேறு மொழிகளில் மொழிபெயர்க்க அதற்கு கட்டு தொடர் லிருந்து ஏற்பாடுகள் செய்யப் படும் என்று முதல் கூட்டத் தொடரில் நீங்கள் வாக்குறுதி அளித்திருந்தீர்கள் ; ஆனல் இதுவரை வரை, இது தொடர் பாக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படாதது உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன் ; இந்தியிலும் மற்ற மொழிகளிலும் நிகழ்த தப்படும் உரைகளேப் பல மொழிகளில் மொழி பெயர்க் கத்தக்க ஏற்பாடுகளை செய் யப்படவேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்"

என்று திரு. எஸ். கே. சம்பந்தம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக் கிறார்.

ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் மாநாடு

அண்மையில் சேலத்தில் கடை பெறறுக்கும் தமிழ்நாடு ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் சங்க 4-வது மாநாட்டுக் குழுக் கூட்டம், செய லாளர் திரு. கே. என். சுவாமிக் கண்ணு தலேமையில் நடைபெற் றது.

மாலில மாநாடு நடத்துவதற் கென வழிவகைகளப் பரிசீலனை செய்து இக்குழு தனது கருத்துக் கண் செயற குழுவிற்கு அறி வித்தும்.

பிப்ரவரி 10, 11 ஆகிய நாட் களில் சென்னையில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர் திரு. தேவசிகன், துணைத் தலேவர் ஆர். சோவிந்த் டி. சாமிவேல் ஆகியோர் அனுப்பு வதென முடிவு செய்தது.

மாநாட்டுக் சிறப்பு மலர் ஒன்று வெளியிடவும் அதற்கான விளம் பரக் கட்டணங்களே வருல் செய்து உதவுமாறு எல்லா நிர்வாக அதி காரிகளேயும் கேட்டுக்கொள்ளவு தெனவும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டுக்குத் தமிழக முத லமைச்சர் உள்ளாட்சித்துறை அமைச்சர், மற்றும் இலாகா அதி காரிகள் ஆகியோரை அழைப்பு தெனவும் முடிவு செய்தது.

பாலர் அரங்கம்

பிப். 2, 3, 4-ந் தேதிகளில் மாலே 4 மணிக்கு

'கலங்கரை விளக்கம்'

(குந்தகைகள் நிறைப்பச் சங்கம் நடாவிக்கது)

கட்டணம் :

சிறுவர்களுக்கு : 20 காசு

பெரியவர்களுக்கு : 40 காசு

ரோஜா

பாக்கு & புகையிலே

N. V. K. M. & சன்ஸ், நெல்லூர்

சென்னை--குமரி கடலோர நெடுஞ்சாலே

சென்னை, ஜன. 30—

சென்னை—குமரி கடலோர நெடுஞ்சாலேத் திட்டத்தின் முதற் படியாக, செங்கற்பட்டு மாவட்டம் வரையில் அக்தச் சாலேயை அமைக்கும் பணிக்கு மாலில அரசு ரூ. 2 இலட்சம் அனுமதித்திருக் கிறது.

திருமணம்

கதர்—கிராமத் தொழில் இயக் குநர் திரு. கே. பி. குமாரசாமி அவர்களின் சகோதரரும் ராம் லால் ஆன்டு கோ உரிமையாளரு மான திரு. கே. பி. கோபிகர் அவர்களின் செல்வன் : சக்தி பாலகிருஷ்ணுவுக்கும் — விழுப்புரம் பிரபல டாக்டர் வேங்கைராஜ் அவர்களின் செல்வி : ஜலஜாவுக் கும் சென்னே ஆழ்ட்பார் மண்ட பத்தில் 21—1—68 அன்று திரு மணம் சிறப்பாக நடைபெற்றது.

தமிழக அமைச்சர்கள் திரு. இரா. நெடுஞ்செழியன், திரு. ஏ. கோவிந்தசாமி, திரு. மா. முத்து சாமி ஆகியோரும், சட்டமன்ற மேலவைத் தலேவர் திரு. மாணிக்க வேலர், முன்னுள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் ஆகியோ ரும் கலந்துகொண்டு மணமக்களே வாழ்த்தினர்.

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்களிடமிருந்தும், மற்றும் பல உள்ளாட்டு வெளி நாட்டு கணர்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துக்கள் வந்தன.

சமுதாய மறுமலர்ச்சியில் தமிழகம் பெற்றுள்ள வெற்றி

மூடப் பழக்கங்களை முறியடிக்கப் பல்லாண்டுகள் பட்டபாடு

தெனாலி சமூகச் சீர்திருத்தச் சங்க விழாவில் அறிஞர் அண்ணா விளக்கம்

தெனாலி, சன. 31—

"நமது சமூகத்தில் மக்கள் பல மூடநம்பிக்கைகளால் ஏமாற்றம் அடைகிறார்கள்! பொருளற்ற சடங்குகளை நாம் வைத்திருக்கிறோம்! சமூகப் பிரச்சினைகளை அணுகுவதற்குத் தேசிய அணுகு முறைகளில்லை! மறை நூல்களை விமர்சிப்பது, 'தெய்வ நிந்தனை'யான செயல் எனக் கருதப்படுகிறது!

"படிக்காதவர்களைக்கூடத் திருத்துவது எளிது; 'படித்தவர்கள்' எனத் தம்மை நினைத்துக்கொண்டிருப்பவர்களைத் திருத்துவதுதான் கடினமானது; தாம் எல்லாம் அறிந்தோர் எனவும், யாரும் தம்மோடு சமூக விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டியதில்லை எனவும் அவர்கள் கூறுவார்கள்.

"இந்தப் பிடிவாதக்காரர்களைத் தமிழ்நாட்டிலுள்ள நாங்கள் எங்கள் கருத்துக்குக் கொண்டுவருவதற்குக் கடந்த இருபதாண்டுகளுக்கு மேல் வாதாடி வந்தோம் —முடிவில் வென்றோம்!

"இவ்வுலகின் தீமைகளை எதிர்த்துப் போரிடுவதற்குக் 'கடவுள்'கூடப் பத்து அவதாரம் எடுத்து மண்ணுக்கு வந்துள்ளார் என்றாலும், மண்ணின் தீமைகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடவில்லை!

"எனவே, தீமைகளை எதிர்த்துப் போராடுவதும், அவற்றை வேரோடு கெல்லி எறிவதும், 'சாதாரண மனிதப் பிறவி'களுக்கு மலையேறுவது போன்ற கடினமான காரியம்தான்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தெனாலியில் நடைபெற்ற கவிராசு இராமசாமி சௌத்திரி—ஆவுல கோபாலகிருஷ்ணமூர்த்தியின் பவ விகாச கேந்திரத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்கள்.

இவ்விழாவுக்கு திரு. ஜி. நரகரி தலைமை வகித்தார்; திரு. எம். சக்கரபாணி வரவேற்புரையாற்றினார்.

ஆந்திர மதுவிலக்கு அமைச்சர் திரு. வி. சத்தியநாராயண ராவ், சென்னை மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், ஆந்திரப் பல்கலைக் கழக முன்னாள் பதிவாளர் திரு. கே. வி. கோபாலசாமி ஆகியோரும் பேசினர்.

திரு. அச்சுதராமன் அண்ணா அவர்கட்கு வரவேற்பு மடல் படித்தளித்தார்.

ஆவுல கோபால கிருஷ்ணமூர்த்தியின் மகன் திரு. ஏ. இராமமோகன்ராய் நன்றி கூறினார்.

அண்ணா அவர்கள் தம் உரையில் மேலும் கூறியதாவது:—

"பிற நாடுகள் மகத்தானவையாக இருக்கின்றன என்றால், அது, அவற்றின் அரசியல்வாதிகளால் மட்டுமன்று—அவற்றின் வழக்கறிஞர்கள், அறிவியல் வல்லுநர்கள், பொறியர்கள், நாடகாசிரியர்கள் ஆகியோரும் அதற்குக் காரணமாவர்! அவர்களும் சம அளவு மதிப்புள்ளோராவர்!

ஓர் அரசியல்வாதி என்ற முறையில் புகழ் வட்டத்திலிருப்பதை நான் வெறுக்கவில்லை என்றாலும், அரசியல்வாதி மட்டும் நாட்டின் பெருமையை உயர்த்தி விட முடியாது!

தெனாலியில் சமூக அநீதிகளையும், சமூகத்தின் சில வகுப்புகள் மறை நூல்களால் ஒடுக்கு முறையில் தள்ளப்பட்டிருப்பதையும் எதிர்த்துக் குரலெழுப்பிய முதல் மனிதர் திரு. இராமசாமி சௌத்திரியாவார்.

தமிழ்நாட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள், சமூக அநீதிகளாலும் குறைபாடுகளாலும் வருந்தும்படி விடப்பட்ட இந்த வகுப்பார்களுக்காக உழைத்தவராவார்.

அப்படிப்பட்ட இவ்விரு மகத்தான சமூகச் சீர்திருத்தவாதிகளும், ஒரே பெயரைப் பெற்றிருப்பது அதிசயம்தான்! 'இராமசாமி' என்ற பெயரைத் தாங்கியுள்ள இவ்விரு மகத்தான மனிதர்களும், கடவுளின் அவதாரமெனக் கருதப்படும் இராமசாமியோடு தொடர்புள்ள கருத்துக்களையும், அமைப்புக்களையும் எதிர்த்து நீண்ட போராட்டம் நடத்தியுள்ளனர்.

திருப்புரனேரி இராமசாமி சௌத்திரி அவர்கள் தொடங்கிய புனிதப் பணியைத் தொடர்ந்து நடத்துவது, எனது மதிப்பிற்குரிய நண்பர் ஆவுல கோபால கிருஷ்ணமூர்த்தியிடம் விடப்பட்டது.

மூடநம்பிக்கையுள்ள மக்களைத் திருத்துவது நண்பர் கோபால கிருஷ்ணமூர்த்திக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதை நானறிவேன்.

எங்களில் சிலரால் தொடங்கப்பட்டு, 'சுயமரியாதைத் திருமணம்' என்று பெயர் பெற்ற எளிமையான திருமணங்களை நடத்தச் சில ஆண்டுகளுக்கு முன் நாங்கள் போலீசுப் பாதுகாப்பை நாடவேண்டியிருந்தது. அந்தத் திருமணங்கள், மதாச்சாரியார்களின்றி — தீயின்றி — மந்திரங்கள் ஓதப்படாமல் நடத்தப்படுவனவாகும்!

உண்மையில், ஓர் சீர்திருத்தத் திருமணத்தை நடத்த நானும், பெரியார் இராமசாமியும் கிராமம் ஒன்றுக்குச் சென்றிருந்த போது, போலீசு நிலையம்வரை வந்து போகும்படி நாங்கள் அழைக்கப்பட்டோம்; நாங்கள் போலீசு நிலையத்திற்குச் சென்றபோது, அங்கிருந்த அதிகாரி, கைது செய்வதற்காகவோ காவலில் வைப்பதற்காகவோ எங்களை அழைத்துவரச் செய்யவில்லை என்றும், மாறாக, சனாதனிகளின் சினத்திலிருந்து காப்பாற்றவே அழைத்துவரச் செய்ததாகவும் பணிவோடு கூறினார்.

ஆனால், இன்றையத்தினம் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட திருமணங்கள் ஆயிரக்கணக்கில் செய்யப்படுகின்றன! போலீசுப் பாதுகாப்பு இன்று தேவையில்லை!

தமிழ்நாட்டு முதலமைச்சராக நான் பதவியேற்ற பின், அப்படிப்பட்ட எளிமையான திருமணங்களுக்குச் சட்ட ஒப்புதல் தரும் மசோதா ஒன்றைக் கொண்டு வந்தேன்; ஏனென்றால், அப்படிப்பட்ட திருமணங்கள் கொஞ்சகாலத்திற்குமுன், உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றில், 'செல்லாதது' எனக் கூறப்பட்டது.

எங்கள் சட்டமன்றத்தில் அந்த மசோதா ஒருமனதாக நிறைவேற்றவும்பட்டது.

இன்னும் வேடிக்கை என்னவென்றால், ஒரு காங்கிரசு உறுப்பினரே எழுந்து, அந்த மசோதாவிலிருந்து 'தாலி கட்டுதல்' என்ற சொல்லை நீக்கிவிடும்படி கோரியதுதான்!

அமெரிக்காவுக்குச் சென்றவேளையில் ஆவுல கோபால கிருஷ்ணமூர்த்தி என்னைச் சென்னையில் சந்தித்தார். இவ்வளவு விரைவில் இறந்துவிடுவார் என்று எண்ண முடியாத அளவுக்கு அப்போது ஆரோக்கியமாக இருந்தார்.

ஆனால், வாழ்க்கையில் நல்லது ஏதேனும் செய்தவன் சாவுக்குப் பின்னும் வாழ்கிறான்! அவன் உடல் செத்துவிட்டாலும், அவன் புகழுடல் இருந்தே தீரும்!

நல்லது செய்யாத மனிதன் உயிரோடு இருந்தாலும், அவன் செத்தவனே!

ஆவுல கோபாலகிருஷ்ணமூர்த்தி முன் வகையைச் சேர்ந்தவர்!

திருப்புரனேரி இராமசாமி சௌத்திரி அவர்களால் தொடங்கப்பட்டதும் — ஆவுல கோபால கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தொடரப்பட்டதுமான அந்த நற்பணியைத் தொடர்ந்து ஆற்றுவது, இங்கே இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ள மறுமலர்ச்சித் தொண்டர்களின் கடமையாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நிஜலிங்கப்பா கார்மீது கல்வீச்சு

மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்ததன் எதிரொலி

தங்கியிருந்த மாளிகைமுன் ஆர்ப்பாட்டம் — அமளி!

சிக்மகளூர், சன. 31—

கருநாடக முதலமைச்சரும் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவருமான திரு. நிஜலிங்கப்பா, ஒரு மாணவர் கூட்டத்தில் பேசிவிட்டு வந்து தங்கியிருந்த பயணிகள் விடுதிக்கு எதிரில் கூடி நின்ற மாணவர்கள்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

இந்நகரில் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளை யடுத்து அமைக்கப்பட்ட சமாதானக் குழுவின் கூட்டம், மாவட்ட அலுவலகத்தில் நடந்தது; அங்கு திரு. நிஜலிங்கப்பா பேசிக்கொண்டிருந்தபோது கட்டிடத்தின்முன் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கூட்டம் முடிந்ததும் நிஜலிங்கப்பா பயணிகள் விடுதிக்குச் சென்றபோது, அவர் கார்மீது கற்கள் வீசப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. கல் வீச்சினால், காரின் பின்பக்கக் கண்ணாடிகள் நொறுங்கியதாகக் கூறப்படுகிறது.

மொழிப் பிரச்சினை குறித்துத் தம்முடன் விவாதிக்க 12 மாணவர்களை மட்டுமே அனுமதிக்க நிஜலிங்கப்பா இசைந்தார்; தம்மைச் சந்தித்த மாணவர்களிடம் அவர், மொழித் தொடர்பாகத் தேவையற்ற இடர்ப்பாடுகள் எதுவும் தென்னக மாணவர்களுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும், இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும் உறுதிமொழி கூறினார்.

அவர் கூறியதை அந்த மாணவத் தலைவர்கள், வெளியே காத்து நின்ற மாணவர்களிடம் வந்து கூறினர்.

ஆனால் அவர்கள், முதலமைச்சர் வெளியே வந்து அங்கு கூடி நிற்கும் தங்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று கோரினர்; உடன், தக்க பாதுகாப்பும் ஒலி பரப்பு ஏற்பாடும் செய்யப்பட்டு, முதலமைச்சர் வெளியே வந்து மாணவர்களிடை பேசினார்.

அவர் தமது உரையில், 'தென்னாட்டு மாணவர்களுக்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படுத்தப்படமாட்டாது' என்றும், அவர்களுக்குக் கல்வித் துறையில் முடிந்தவரை உதவி செய்வதாகவும் உறுதி கூறினார்.

முதலமைச்சரின் இந்த உறுதிமொழியில், கூட்டத்தினருக்கு மனநிறைவு ஏற்படவில்லை; உடனே இந்தி எதிர்ப்பு முழக்கமிட்டு, தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போலீசார் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்.

வட்டக் குழுக் கூட்டம்

"3—2—68 காலை 10 மணியளவில் மதுராந்தகம் தி.மு.க. பணிமனையில் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், திரு. சி. சிட்டிபாபு எம்.பி. முன்னிலையில் நடைபெறும்; அது சமயம் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராய வேண்டியிருப்பதால் இதனையே அழைப்பாகக் கொண்டு உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்" என வட்டச் செயலாளர் கா.சு. தனபாலன் அறிவிக்கிறார்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

பிப்ரவரி 2-ம் நாள் முதல் 10-ம் நாள்வரையில் திருச்சி, இராசிபுரம், சேலம், ஓசூர், கிருஷ்ணகிரி, கடலூர், விருத்தாசலம் ஆகிய ஊர்களில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகளில், வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தமது உடல்நிலைக் குறைவின் காரணமாக-மருத்துவரின் ஆலோசனையின்படி கலந்துகொள்ள இயலாமலிருப்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், மீண்டும் இவ்வூர்களில் நடைபெறும்நிகழ்ச்சிகளுக்குத் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

பிப். 2 திருச்சி (அன்பில் தர்மலிங்கம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள்)

பிப். 3 காலை 9 மணி: தொட்டியம் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடத் திறப்பு; 11 மணி: நாமக்கல் கல்லூரிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பு

பிப். 4 காலை 10 மணி: சின்னமனூர் ஊராட்சி சமுதாயக் கூட அடிக்கல் நாட்டு விழா; 12-30 மணி: கன்னிசேர்வைப்பட்டி; பிற்பகல் 1 மணி: இராசக்க நாயக்கனூர் மேநிலை நீர்த்தொட்டித் திறப்புவிழா; 5 மணி: தேனி—பொதுமக்கள் வரவேற்பு; 7 மணி: சின்னமனூர் ஆசிரியர் சங்க விழா; 8-30 மணி: சின்னமனூர் பொதுமக்கள் வரவேற்பு.

தமிழகச் சட்டமன்றம்

பிப். 10-ல் கூடுகிறது

சென்னை, சன. 31—

தமிழகச் சட்டமன்றக் கூட்டம், பிப்ரவரி 10-ம் நாள் துவங்கி ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் நடைபெற்று பின்னர் ஒத்திவைக்கப்படும். பிறகு, வரவு-செலவுத் திட்டத்தை விவாதிப்பதற்காக மீண்டும் கூடும்.

பிப்ரவரி திங்கள் இறுதியில் அல்லது மார்ச் திங்கள் துவக்கத்தில் மாநில வரவு-செலவுத் திட்டம் அளிக்கப்படும்.

பிப்ரவரி 10-ம் நாளன்று, சட்டமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றுவார்; அடுத்துவரும் நாட்களில் கவர்னர் உரைமீது விவாதம் நடைபெறும்.

ஏ. வி. இராமன் நினைவு நாள்

அண்ணா--இராஜாஜி--அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, பிப். 1—

வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களின் தந்தையார் திரு. ஏ. வி. இராமன் அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் விழா, நேற்று ஆபட்ஸ்பரி மாளிகையில், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலும்—இராஜாஜி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்துகொண்டு மறைந்த பெரியாரின் சீரிய பண்புகளையும், அரிய பணிகளையும் விளக்கிப் பாராட்டிப் பேசினார்கள்.

உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், புரட்சி நடிசர் எம்.ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., க. இராசாராம் எம்.பி., சென்னை ஷெரீப் திரு. நாராயணசாமி, நீதிபதி திரு. மா. அனந்தநாராயணன் ஆகியோர் பேசினர்.

திரு. வி. பி. இராமன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைப் படிப்பில் திரு. ஏ. வி. இராமன் பெயரால் ஒரு பரிசை ஏற்படுத்தும்பொருட்டு ஐயாயிரம் ரூபாய்க்கான காசோலை ஒன்றை திரு. வி. பி. இராமன், முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் அளித்தார்.

தமது தந்தையார் இயற்றிய ஆங்கில — தமிழ் அகராதியை நூலாக வெளியிடுமாறு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்திடம் தாம் கொடுத்துள்ளதாகவும், அது இதுவரை வெளியிடப்படவில்லை என்றும், இந்தக் காரியத்தை அண்ணா அவர்கள் நிறைவேற்றிவைக்க வேண்டும் என்றும் திரு. வி பி. இராமன் பேசுகையில் கோரினார்.

அண்ணா அவர்கள் பேசுகையில், இந்த அகராதி பற்றி விசாரித்து ஆவனசெய்வதாக உறுதியளித்தார்.